# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : திரு. **மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 117 /பேரூ/2024**
**நாள் : 26.09.2025**

திரு. K.S. நாகராஜன்,
மம்சாபுரம்,
விருதுநகர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
மம்சாபுரம் பேரூராட்சி,
விருதுநகர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டம், மம்சாபுரம் மெயின்ரோடு -1 என்ற முகவரியை சேர்ந்த திரு. K.S. நாகராஜன் என்பவரது 14.08.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.08.2024 அன்று பெறப்பட்டு, 117/பேரூ/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**<u>ஆணை</u>**

விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டம், மம்சாபுரம் மெயின்ரோடு -1 என்ற முகவரியை சேர்ந்த மனுதாரர் திரு. K.S. நாகராஜன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிய 14.08.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

"மம்சாபுரம் பேரூராட்சியில் 12-வது நிதிக்குழு மானியம் மூலம் பொது சுகாதார அலகு கட்டிடம் ரூ.120 இலட்சம் செலவில் ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் கட்டப்பட்டு வருகிறது. மேற்படி கட்டிடம் கட்டுவதற்கான ஒப்பந்ததாரர் மு. ஜோதி என்பவர் ஏற்கனவே கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வடிகால் அமைப்பானது அந்த ஒப்பந்தப்பணியினை எடுத்துள்ள ஒப்பந்ததாரரால் சரியான முறையில் பணிகள் மேற்கொள்ளப்படாமல் வடிகால் பணிக்கு சரியான கலவை (சிமெண்ட், ஜல்லி, மணல் அல்லது M-Sand) பயன்படுத்தப்படவில்லை. மேற்படி வடிகால் பணியானது புதிதாக ஏற்படுத்தப்படுவதால் அடிப்பாகத்தில் முறையான பிளாட்

அமைப்பு ஏற்படுத்தாத நிலையில் இடிந்துவிட்டது. மேற்படி ஒப்பந்தப்பணியினை மேற்கொண்ட ஜோதி பொது சுகாதார அலகு கட்டிடத்தினை கல்தூசி மற்றும் எம்.சாண்ட் கழிவு ஆகியவைகளை வைத்து சரியான சிமெண்ட் கலவை சேர்க்காமலும் தரமற்ற முறையில் கட்டி வருகிறார். மேற்படி கட்டிட பணியினை மேற்கொள்வதற்கு அவரிடம் போதுமான இயந்திரங்கள் கிடையாது. மேற்படி கட்டிட பணியினை பேரூராட்சியிலிருந்து நிர்வாக அலுவலரோ, பொறியாளரோ, மேற்பார்வையிடவில்லை. இது சம்பந்தமாக புகார் கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேற்படி பணிக்காக பல இலட்சம் ரூபாய் லஞ்சமாக கொடுக்கப்பட்டுள்ளதாகவும், அதனால் தன் இஷ்டப்படிதான் கட்டிடத்தை கட்டுவேன் என்றும் ஒப்பந்ததாரர் தெரிவித்து வருகிறார்.

எனவே மேற்படி ஒப்பந்தப்பணியினை சரியான முறையில் மேற்பார்வையிட்டு கட்டவில்லையெனில் அரசுக்கு மிகுந்த இழப்பும் அதிகப்படியான முறைகேடு நடைபெறும் என்றும் உரிய நடவடிக்கை எடுக்கும்படி கோரி புகார்மனு தாக்கல் செய்துள்ளேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 30.08.2024 அறிவிப்பு மூலம் மம்சாபுரம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. மம்சாபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. பா. இராதாகிருஷ்ணன் என்பவர் தனது 22.07.2025 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

விருதுநகர் மாவட்டம், மம்சாபுரம் பேரூராட்சியில், 15-வது நிதிக்குழு மானியம் மூலம் கட்டப்பட்டு நிறைவுறும் தருவாயில் உள்ள ரூ.120 இலட்சம் மதிப்பீட்டிலான மம்சாபுரம் பேரூராட்சி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பொது சுகாதார அலகு கட்டிடம் கட்டப்பட்டு வருவதாகவும் மேற்காணும் கட்டிட பணியினை செய்து வரும் ஒப்பந்ததாரர் திருமதி. ஜோதி என்பவரால் கட்டிட பணியில் கல்தூசி, எம்சாண்ட் கழிவு வைத்து சரியான சிமெண்ட் கலவை சேர்க்கப்படாமல் தரமற்ற முறையில் கட்டிவருவதாகவும் மனுதாரர் தெரிவித்துள்ளார். இக்கட்டிட பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்ததாரரிடம் போதுமான இயந்திரங்கள் கிடையாது எனவும், மேற்காணும் கட்டிட பணியினை பேரூராட்சி நிர்வாக அலுவலரோ, பொறியாளரோ மேற்பார்வை செய்யவில்லை எனவும் இப்பணிக்காக பல இலட்சம் ரூபாய் ஒப்பந்ததாரரால் கொடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்து, இதனால் அரசுக்கு மிகுந்த இழப்பு ஏற்படுவதாகவும் புகார் தெரிவித்துள்ளார்.

மனுதாரரின் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் அடிப்படை ஆதாரமற்றதும், உண்மைக்கு புறம்பானதும், உள்நோக்குமுடையாகவும் உள்ளது என்பதற்கு கீழ்க்கண்ட விபரப்படியான உண்மை தகவல்களை பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

மம்சாபுரம் பேரூராட்சியில் 2023-2024ஆம் ஆண்டு 15-வது நிதி ஆணைய சுகாதார மானிய திட்டத்தின் கீழ் மம்சாபுரம் பேரூராட்சி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பொது சுகாதார அலகு கட்டிடம் கட்டிட பணி உத்தேசிக்கப்பட்டு, மதுரை ஜியோ மேட்ரிக்ஸ் கன்சல்டன்சி நிறுவனத்தால் மண் பரிசோதனை செய்யப்பட்டு, அந்நிறுவனத்தின் அறிக்கை எண். 92/TP/GMC/2023-24 நாள் 02.12.2023-ன்படி அறிக்கை பெறப்பட்டு முறையாக, விருதுநகர் பொதுப்பணித்துறை கட்டிட கோட்ட செயற்பொறியாளர் அவர்களின் கடித எண். வபி/இவஅ.1/கோ.28/230M/2023 நாள் 11.07.2023ன்படி ஆட்சேபனையின்மை சான்று பெறப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 4407/2023/உ2, நாள் 11.12.2023-ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து சென்னை பேரூராட்சிகளின் இயக்கக கண்காணிப்பு பொறியாளர் அவர்களின் ந.க.எண். 4407/2023/உ2 நாள் 03.01.2024-ன்படி தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டுள்ளது. இப்பணியானது இரு உறை முறைப்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர் திருமதி. மு. ஜோதி என்பவரால் சமர்ப்பிக்கப்பட்ட தொழில்நுட்பரீதி ஒப்பந்தப்புள்ளியில் (Technical Bid) அன்னாரிடம் இப்பணியினை செய்வதற்கு உரிய நிதி ஆதாரம் உள்ள விபரம் அறியப்பட்டதுமின்றி இப்பணியினை மேற்கொள்வதற்கு உரிய உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுவதற்கான ஆதாரங்களும் அறியப்பட்டு அதனடிப்படையிலேயே தனியரது விலைரீதியான ஒப்பந்தப்புள்ளி (Price Bid) பரிசீலிக்கப்பட்டு இப்பணியினை மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இப்பணியானது பேரூராட்சியின் உதவி பொறியாளர் (தொகுப்பு), உதவி செயற்பொறியாளர் ஆகியோர்கள் மற்றும் பேரூராட்சிகள் கண்காணிப்பு பொறியாளரால் மேற்பார்வை செய்யப்பட்டு மேற்காணும் பணிக்கான அளவுகள் அனைத்தும் அளவு புத்தகம் எண். 18, 18A, 18 B-ல் பதிவு செய்யப்பட்டு அதனடிப்படையில் இப்பணிக்கான மொத்த மதிப்பீட்டு தொகை ரூபாய் 1,20,00,000/-ல் 95% தொகை ரூ.1,14,00,000/-ஐ நான்கு கட்டங்களாக வழங்கப்பட்டு எஞ்சிய தொகை ரூ.6,00,000 பட்டியலில் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. மேலும் உரிய மூன்றாம் தரப்பு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, முடிவறிக்கை பெறப்பட்ட பின்னரே எஞ்சிய தொகை வழங்கப்படும் என்ற விபரத்தினை இதன் வழி பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இக்கட்டிட பணியில் முறையான அளவு கட்டுமான பொருட்கள் பயன்படுத்தப்பட்டு தரமாகவே கட்டி முடிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது. அதுமட்டுமின்றி இப்புகார் எவ்வித ஆதாரமற்றதாகவும், உண்மைக்கு புறம்பானதாகவும் மற்றும் உள்நோக்கம் உடையதாகவும் உள்ளது என்ற விபரத்தினை மீண்டும் பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

பணி தொடர்புடைய மதிப்பீடு, கோப்புகள், அளவு புத்தகங்கள் மற்றும் பட்டியல்கள் ஆகியவற்றின் நகல்கள் நடுவர் அவர்களின் பார்வைக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே மேற்காணும் அறிக்கையினை ஏற்றும் உரிய ஆவணங்களை பார்வையிட்டும் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட முறையீட்டு மனுவினை நிராகரிக்குமாறும் பணிவுடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான மம்சாபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கு 24.07.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 15.07.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரரான திரு. K.S. நாகராஜன் என்பவர் 24.07.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

6. எதிர்மனுதாரர் மம்சாபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. பா. இராதாகிருஷ்ணன் என்பவர் 24.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்: அதில் -

- விருதுநகர் மாவட்டம், மம்சாபுரம் பேரூராட்சியில் 2023-24ஆம் ஆண்டு 15-வது நிதி ஆணைய சுகாதார மானிய திட்டத்தின் கீழ் ரூ.120 இலட்சம் மதிப்பீட்டில் ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் கட்ட,

  (1) மதுரை, ஜியோ மேட்ரிக்ஸ் கன்சல்டன்சி நிறுவனத்தால் 02.12.2023 அன்று மண் பரிசோதனை செய்யப்பட்டும்.
  (2) விருதுநகர் பொதுப்பணித் துறை கட்டட கோட்ட செயற்பொறியாளரின் 11.07.2023 நாளிட்ட ஆட்சேபனையின்மை சான்று பெறப்பட்டும்.
  (3) பேரூராட்சிகளின் இயக்குநரின் 11.12.2023 நாளிட்ட செயல்முறைகள் ஆணையில் நிர்வாக அனுமதி பெறப்பட்டும்.
  (4) சென்னை பேரூராட்சிகள் இயக்கக கண்காணிப்பு பொறியாளரின் 03.01.2024 நாளிட்ட கடிதத்தில் தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

- மேற்காணும் கட்டுமானப் பணியினை மேற்கொள்ள, உரிய ஒப்பந்தப்புள்ளி மூலம் உரிய உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் பயன்படுத்துவதற்கான ஆதாரங்களுடன் கூடிய ஒப்பந்ததாரர் திருமதி. மு. ஜோதி என்பவருக்கு இப்பணியினை மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கப்பட்டது.

- கட்டுமானப் பணிகளை பேரூராட்சியின் உதவி பொறியாளர் (தொகுப்பு), உதவி செயற்பொறியாளர் மற்றும் பேரூராட்சிகள் கண்காணிப்பு பொறியாளரால் மேற்பார்வையிட்டு கட்டுமான பணிகள் அனைத்தும் அளவு புத்தகத்தில் (M. Book) பதிவு செய்யப்பட்டுள்ளது.

- அளவு புத்தகத்தில் பதியப்பட்ட பணிகளின் அடிப்படையில் பணியின் மொத்த மதிப்பீடான ரூ.120 இலட்சம் தொகையில் 95% தொகையான ரூ.114 இலட்சம் 4 கட்டங்களாக வழங்கப்பட்டு எஞ்சியுள்ள ரூ.6 இலட்சம் தொகையானது உரிய மூன்றாம் தரப்பு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, முடிவறிக்கை பெறப்பட்டபின் வழங்கப்படும்.

- மேற்காணும் நிலையில் ஆரம்ப சுகாதார நிலைய கட்டுமான பணியானது முறையான கட்டுமான பொருட்களுடன் கட்டப்பட்டுள்ளது என்றும் மனுதாரர் எவ்வித ஆதாரமின்றியும், உண்மைக்கு புறம்பாகவும் மற்றும் உள்நோக்கத்துடன் புகாராக தெரிவித்துள்ளார் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு மற்றும் எதிர்மனுதாரரான மம்சாபுரம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

விருதுநகர் மாவட்டம், மம்சாபுரம் இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. K.S. நாகராஜன் என்பவர் தனது 14.08.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் மம்சாபுரம் பேரூராட்சியில் ரூ.120 இலட்சம் மதிப்பீட்டில் தரமற்ற ஆரம்ப சுகாதார நிலைய வளாகம் கட்டப்பட்டு வருவதாக புகாராக தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம், மம்சாபுரம் பேரூராட்சியில் 2023-2024ஆம் ஆண்டின் 15-வது நிதி ஆணைய மானிய திட்டத்தின்கீழ் சுகாதார துறை மானியமாக ரூ.120 இலட்சம் மதிப்பீட்டில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட பேரூராட்சிகளின் இயக்குநரின் 11.12.2023 நாளிட்ட நடவடிக்கைகள் ந.க. எண். 4407/2023/உ2-ல் நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து பேரூராட்சிகள் இயக்கக கண்காணிப்பு பொறியாளரின் 03.01.2024 நாளிட்ட செயல்முறைகள் ந.க.எண். 4407/2022/உ2-ல் தொழில்நுட்ப அனுமதியும் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்காணும் ஆரம்ப சுகாதார நிலைய கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை, ஆவணங்கள் மற்றும் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது. மேலும் கட்டுமானப் பணிகள் குறித்து அளவு புத்தகத்தில் பதியப்பட்டும், பணியின் மொத்த மதிப்பீட்டான ரூ.120 இலட்சம் தொகையில் ரூ.114 இலட்சம் (95%) ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளது எனவும், எஞ்சிய தொகை ரூ.6 இலட்சம் மூன்றாம் தரப்பினர் கட்டடப் பணியினை ஆய்வு செய்து, அறிக்கை பெற்றவுடன் வழங்கப்படும் என்பதையும் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

மேற்காணும் சூழ்நிலையில் மம்சாபுரம் பேரூராட்சியில் ரூ.120 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தின் கட்டுமானப் பணிகள் தரத்துடன் முறையாக கட்டப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்வதற்காக பேரூராட்சிகளின் இயக்குநரக செயற் பொறியாளர் தலைமையில் ஒரு குழுவினை அமைத்து, அக்குழு நேரடியாக கள ஆய்வு செய்து அதன் அறிக்கையை உடனடியாக பெற்று அதன் அடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ள பேரூராட்சிகளின் இயக்குநரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. K.S. நாகராஜன்,
மெயின்ரோடு -1, மம்சாபுரம்
திருவில்லிபுத்தூர் வட்டம்,
விருதுநகர் மாவட்டம் - 625 531

2) செயல் அலுவலர்,
மம்சாபுரம் பேரூராட்சி,
விருதுநகர் மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

6/10/25
செயலாளர்
06/10/25

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032